செ.வெ.எண்:.415 நாள்:. 22.5.2010

<u>செய்தி வெளியீடு – 22.5.2010</u>

## தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையராக திரு. சையத் முனீர் ஹோடா இ.ஆ.ப. நியமனம்!

## மேதகு தமிழக ஆளுநர் ஆணை!

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையராகப் பணிபுரிந்த திரு டி. சந்திரசேகரன் இ.ஆ.ப. (ஓய்வு) அவர்களின் பதவிக் காலம் 21.5.2010 அன்று முடிவடைந்ததால், தற்போது திரு. சையத் முனீர் ஹோடா, இ.ஆ.ப அவர்களைத் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையராக நியமனம் செய்து மேதகு தமிழக ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் இன்று (22.5.2010) ஆணையிட்டுள்ளார்கள்.

திரு. சையத் முனீர் ஹோடா அவர்கள் மாநில தேர்தல் ஆணையராகப் பொறுப்பேற்கும் நாள்முதல், இரண்டு ஆண்டு காலத்திற்கு இப்பதவியில் பணிபுரிவார்.

*****

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9